//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.127/2022**

**prosecution witness: PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சித்ரகலா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**02.02.2024**

முதல் விசாரணை:

1.நான் இராமேஸ்வரம் விட்டில்பிள்ளை முடுக்கு தெருவில் தற்சமயம் குடியிருந்து வருகிறேன். நான் இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். கடந்த 11.04.2016-ம் வருடம் எனக்கும், ஆஜர் எதிரிக்கும் பதிவு திருமணம் நடந்தது. திருமண வாழ்க்கையின் பலனாக 16.03.2017-ம் தேதி எனக்கும், ஆஜர் எதிரிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

2.நானும், ஆஜர் எதிரியும் அமைதியாக வாழ்ந்து வந்தோம். கடந்த 2018-ம் ஆண்டு முதல் சுமதி என்பவருடன் என் கணவர் பழகி வந்தார். இதனால் எனக்கும், ஆஜர் எதிரிக்கும் அடிக்கடி சண்டை வந்தது. அதன் காரணமாக எதிரியின் மீது ஏற்கனவே புகார் மனு அளித்து CC.No.08/2021 ல் வழக்காக நிலுவையில் இருந்து வருகிறது.

3. நானும், ஆஜர் எதிரியும் குழந்தைக்காக இதுவரை சேர்ந்து வாழ முடிந்தவரை முயற்சித்தேன். ஆனால் எதிரி என்னை அடிக்கடி துன்புறுத்தியதால் 27.04.2021-ம் வருடம் மிக மோசமாக என்னை அடித்து இரண்டு மணி நேரம் சுயநினைவு இல்லாமல் இருந்தேன்.

4.பிறகு நான் என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன். அப்போதிலிருந்து தற்போது வரை என் அம்மா வீட்டில் தான் வசித்து வருகிறேன். கடந்த 15.05.2021-ம் தேதி நாங்கள் குடியிருந்த வீட்டை வீட்டின் உரிமையாளர் காலி பண்ண சொல்லி பிரச்சனை செய்தார். அதனால் எனக்கு சொந்தமான பொருட்கள் அனைத்தையும் எடுதததுகொள்வதற்காக ஈஸ்வரி அம்மன் கோவில் தெருவில்

இருக்கும் வீட்டிற்கு நானும், என் அம்மா, அக்கா ஆகியோர்களுடன் சென்றேன் அப்போது மணி மதியம் 01.00 மணி இருக்கும்.

5.அப்போது ஆஜர் எதிரி வந்து அவரது நண்பர்களுடன் வீட்டிற்குள் அமர்ந்து சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார். நர்ங்கள் சென்றதும் எங்களை பார்த்தவுடன் எதிரியின் நண்பர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் சென்று எனது பொருட்களை எடுக்கும் போது ஆஜர் எதிரி என்ன செய்கிறாய் என்று கேட்டார் நான் வீட்டின் உரிமையாளர் வீட்டை காலி பண்ண சொல்லிவிட்டார் அதனால் எனக்கு சொந்தமான பொருட்களை நான் எடுத்து செல்வேன் என்று கூறினேன்.

6.நான் பீரோவில் துணி எடுத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி பின்னால் இருந்து காலால் எட்டி உதைத்து தள்ளினார் நான் கீழே விழுந்துவிட்டேன். என் அக்கா பாக்கியலட்சுமி ஏன் இப்படி செய்கிறாய் என்று எதிரியை கேட்டதற்கு நான் அப்படி தான் செய்வேன் தேவடியா மகளே நீ இருப்பதால் தான் என்னால் சுமதியோடு சந்தோஷமாக பேசி பழக முடியவில்லை ஒழுங்கா டைவர்ஸ் கொடுத்துவிட்டு போ என்று சொன்னார்.

7.பின்னர் உயிருடன் இருந்தால்தானே பொருட்களையும், பிள்ளையையும் அழைத்து செல்வீர்கள் என்று கூறிக்கொண்டே செங்கல், கம்பு ஆகியவற்றை கொண்டு என்னை மோசமாக அடித்து காயத்தை ஏற்படுத்தினார். பின்பு எனது ஆண் குழந்தையை கூட்டிக்கொண்டு ரூமிற்குள் சென்று பூட்டிக்கொண்டார். பின்பு எனக்கு உடல் முழுவதும் வீக்க காயமாக இருந்தது. எனது சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்தவர்கள் hello police க்கு நகர் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள். நகல் காவல்நிலையத்தில் இருந்து போலீசார் வந்து விசாரித்து நகர் காவல்நிலையம் வந்து புகார் கொடுக்குமாறு கூறினார்கள்.

8. பின்னர் நான் நகர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். அப்போது கொரோனா காலம் என்பதால் என்னை உள்நோயாளியாக அனுமதிக்காமல் புறநோயாளியாக சிகிக்சையளித்து அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.127/2022**

**prosecution witness: PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியலெட்சுமி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**02.02.2024**

முதல் விசாரணை:

1.நான் இராமேஸ்வரம் விட்டில்பிள்ளை முடுக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எதிரியும். அ.சா.1 எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரிக்கு சுமதி என்பவருக்கு பழக்கம் ஏற்பட்டது சம்பந்தமாக ஆஜர் எதிரிக்கும், அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்து வந்தது.

2. அதனால் ஆஜர் எதிரி தினமும் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து அ.சா.1 ஐ அடித்து துன்புறுத்தி வந்தார். கடந்த 27.04.2021-ம் தேதி ஆஜர் எதிரி அ.சா.1 ஐ அடித்து காயப்படுத்தினார். அது முதல் அ.சா.1 எனது அம்மா வீட்டில் வசித்து வருகிறார். வீட்டு வாடகை கொடுக்காததால் அ.சா.1 ம், எதிரியும் வசித்து வந்த வீட்டை காலி செய்ய சொல்லி வீட்டின் உரிமையாளர் அ.சா.1 யிடம் தொலைபேசி மூலம் வற்புறுத்தி வந்தார். அதனால் 15.05.2021-ம் தேதி மதியம் 01.00 மணியளவில் அ.சா.1, நான், என் அம்மா மூவரும் என் தங்கை வீட்டிற்கு பொருட்களை எடுத்து வரலாம் என்று சென்றிருந்தோம்.

3. அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ ஸ்கேட்டிங் போர்டு மற்றும் செங்கல் கல் ஆகியவற்றை வைத்து அடித்து காயப்படுத்தினார். நானும், எனது அம்மாவும் சத்தம்போட்டோம். அப்போது ஆஜர் எதிரி அசா.1 ஐ பார்த்து தேவடியா மகளே நீ உயிரோடு இருக்கக்கூடாது உயிருடன் இருப்பதால் தான் சுமதியோடு வாழமுடியவில்லை என்று கூறிவிட்டு எனக்கு விவாகரத்து கொடுத்துவிடு என்று கோபமாக பேசி விட்டு தன் மகனை அழைத்து கொண்டு ரூமிற்குள் சென்று

பூட்டிக்கொண்டார்.

4.அதன்பிறகு நாங்கள் மூவரும் நகர் காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க அ.சா.1 புகார் மனு கொடுத்தார். அதன்பின்பு அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சென்றார் அங்கு கொரோனா கால கட்டம் என்பதால் புறநோயாளியாக அ.சா.1 க்கு சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்